<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 17/2022</u>

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியாகிய **<u>நடராஜன் PW1</u>** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.**L., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 29.01.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | நடராஜன் | | |
| Father Name | : | தங்கவேல் முதலியார் | Court | : |
| Village | : | செம்பனார்கோவில் | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 76 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>வாதியை மீண்டும் அழைத்து முதல் விசாரணை செய்வதற்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு I.A. No.3/2024 என கோப்பில் எடுக்கப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று சாட்சி மீண்டும் அழைத்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.:–</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

தாவா சொத்திற்கான வாதியின் தந்தை தங்கவேல் முதலியார் பெயரில் உள்ள பட்டாவின் உண்மை நகல் **வா.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.